மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும்

நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 6-

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ''மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பெற்றோர்கள் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள்! பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் சொல்வதையே அதிகம் நம்புகிறார்கள்...

அந்த மாணவர்களுக்குத் தமிழை, அறத்தை, அரசியலை, அறிவியலை என அனைத்தையும் கற்பித்து அவர்களின் உயர்வுக் காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 உறையூர் மருத்துவமனை பகுதியில் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூபாய் 305 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகம் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி திட்ட பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் .சரவணன். மேயர் மு.அன்பழகன். மாநகராட்சி ஆணையர் மதுபாலன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், விஜய் ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், காஜாமலை விஜய், இளங்கோ, நாகராஜ், கமால் முஸ்தபா, கிராப்பட்டி செல்வம், தொமுச அமைப்பாளர் குணசேகர், கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி மற்றும் உதவி ஆணையர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தூய்மை பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாராவுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.9.2025) புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார். துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா கணவர் ராமச்சந்திரன், குழந்தைகள் செல்வி ரா.சூசைமேரி, செல்வி ரா.சுவாதி, செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ ஆகியோர் உடன் உள்ளனர்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தஞ்சை, செப். 6 -

தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (07.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4 மணியளவில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுபோது தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குட்பட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர், துணை தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :- நடைபெறவுள்ள முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்குட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி, வட்ட, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 05.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 04-09-2025